



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வெற்றி வேட்பாளர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து கழக இளைஞர் அணி சார்பில் தேர்தல் பணியாற்றிட மண்டலம் 4,5,6,9 க்குட்பட்ட மாவட்ட, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. அதில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், கழக மகளிர் அணி துணை செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கே.இ.பிரகாஷ் எம்.பி., இன்பா ரகு, சீனிவாசன் எம்.எல் ஏ., ஆனந்தகுமார், மு.ஜெயக்குமார் எம்.எல்.ஏ., எஸ்.முருகானந்தம், திருப்பூர் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் யுவராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் கீழாத்தூர் ஊராட்சி சமத்துவபுரம் பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு,இன்று பகுத்தறிவு பகலவன், தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த நாளினை முன்னிட்டு அவரின் திருவுருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாலை அணிவித்து மரியாதை செய்து, ”சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்நிகழ்வில் திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.ரவி , ஒன்றிய அவைத் தலைவர் கே.ஆர்.சண்முகம், பேரூராட்சி கவுன்சிலர் கண்ணன், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் அண்ணாதுரை, கே.என்.பி.எஸ்.நாடிமுத்து, நாகராஜன், குமார், கோவில்பட்டி நாகராஜன், அரங்க. செல்லையா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மதுராந்தகம் - தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தல் :

# தி.மு.க. வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பணிக் குழு!

## திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சத்யா அறிவிப்பு!

சென்னை, செப். 22 -

2031 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற வேண்டிய தேர்தல் ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏன் எதற்கு யாரால் ஏற்பட்டது?

இடைத்தேர்தல் நடைபெறவேண்டிய விழுமிய காரணங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இயற்கை எய்தி இருக்க வேண்டும் அல்லது நீதிமன்றத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்று இருக்க வேண்டும். இவையெவையும் நடைபெறாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தேர்ந் தெடுக்கப் பட்ட சில நாட்களிலேயே தன் சுயலா பத்திற்காக பதவியை ராஜினாமா செய்த தால் மக்க ளின் வரிப்பணம் நேரம், காலம் வீணாக விரையம் ஆகிறது,

சரியான காரணம் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்யும் நபரால் ஏற்படும் பொருளாதார இழப்பை சம்பந்தப் பட்ட நபரிடம் வசூலித்து இனி அவர் தேர்தலில் போட்டியிட முடியாத அளவிற்கு சட்ட திருத்தத்தை தேர்தல் ஆணையம் செய்ய வேண்டும்.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று மற்றொரு கட்சியில் சேரும் போது கட்சித் தாவல் சட்டத்தின் மூலம் பதவி இழப்பதைப் போன்று இனி தேர்தலில் நிற்க முடியாது என்ற நிலை வந்தால் ஒழிய குதிரை பேர அரசியல் கோமாளி கூத்துக்கள் நடப்பதை தவிர்க்க முடியாது என்பதை ஜனநாயக சக்திகள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்கு



மாத சம்பளம், பயணப் படி என்று ஐந்து ஆண்டுகளுக்கு குறைந்த பட்சம் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் வருவாய் வரும் சட்ட மன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் அந்த சலுகைகளை இழக்கின்றார் என்றால் அவர் அடைந்த ஆதாயம் என்ன ? என்ற கேள்வி எழுகிறது

சட்ட மன்ற உறுப்பினர் பதவி என்பது ஒன்றும் கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போன்று அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிக் கென்று சமூகக் கடமை இருக்கிறது கட்சி கட்டுப்பாட்டை மீறி சுயநலத் தோடு முடிவு எடுத்து இருக்கின்றார்கள் என்றால் சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமானது ஜனநாயகத்தில் கேள்விக்கு உட்படுத்தப் பட்டது என்பதை திராவிட வெற்றிக் கழகம் நாட்டு மக்களுக்கு சுட்டிக் காட்டுவது ஜனநாயக கடமை.

எனவே ஜனநாயக விரோத நடவடிக்கையில் ஈடுபட்ட அதே நபர்கள் இடைத் தேர்தலில் மீண்டும் போட்டியிட்டால் அவரை ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களான வாக்காளர்கள் நிராகரித்து தக்க பாடம் புகட்ட திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் வாக்காளப் பெருமக்களை கேட்டுக் கொள்வதோடு

2026 அக்டோபர் 06 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறவுள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்ற இடைத்தேர்தலில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களின் வெற்றிக்கு வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து

வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் செய்ய கீழ்க் கண்டவாறு பணிக்குழு அமைக்கப் படுகிறது.

**மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

மாநில செயலாளர்கள்/ செங்கல்பட்டு மாவட்ட செயலாளர்

ஊனை பார்த்திபன்

99403 83840

ஆட்சி மன்ற குழு உறுப்பினர்

காஞ்சிபுரம் மாவட்ட செயலாளர் காஞ்சி வளையாபதி

94445 66827

கௌரவ ஆலோசகர் டாக்டர் ஒ வி ஜெயக்குமார்

94433 28851

ஆட்சி மன்ற குழு உறுப்பினர்

வல்லம் கோபி 94450 05999

மாவட்ட துணை செயலாளர்

முருகம்பாக்கம்

கலைவாணி மாரிமுத்து

84896 96670

பழையனூர் ஊராட்சி மன்றத் தலைவர் நாகராஜ்

93449 47145

ஜானகி புரம் ஊராட்சி மன்றத் தலைவர்

பரிமள ராஜா

மதுராந்தகம்

ஒன்றிய செயலாளர்

ராஜா

90478 33648

பொதுக்குழு உறுப்பினர் மாமண்டூர் சேகர்

99942 47428

மதுராந்தகம் நகர செயலாளர் ராஜி

99942 19649

அச்சிறுபாக்கம் ஒன்றிய செயலாளர்

தேவராஜ்

90256 50079

கருங்குழி பேரூர் செயலாளர்

சரத்

99440 19962

சித்தாமூர்

கி ஒன்றிய செயலாளர் நுகும்பல் ரவி

98409 88706

சித்தாமூர்

மே ஒன்றிய செயலாளர்

சோத்துப்பாக்கம் திவாகரன்

95662 36649

உள்ளிட்டோர் திமுக தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் மதுராந்தகம் சட்ட மன்ற தொகுதி தேர்தல் பணிக்குழுவுடன் இணைந்து தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள்.

**தாராபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழு**

துணை பொதுச் செயலாளர்

கோவை ஆனந்த்

98422 20840

துணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர்

சேலம் ஆனந்தராஜ்

93616 36316

கொள்கை விளக்க அணி மாநிலத் தலைவர் பொள்ளாச்சி

விக்னேஷ் காமராஜ்

63818 25953

தொழிலாளர் அணி மாநிலத் தலைவர்

திருப்பூர் ஜாகீர் உசேன்

95438 61618

விளையாட்டு மேம்பாட்டு குழு மாநில செயலாளர் மாஸ்டர் பிரகாஷ் 99443 00722

திருப்பூர் மாவட்ட செயலாளர்

ஜெயக்குமார்

86678 32607

ஈரோடு மாவட்ட செயலாளர்

ஜெய் சித்ரா

97506 33110

திண்டுக்கல் மாவட்ட செயலாளர்

மருது ஆறுமுகம்

99658 20007

கரூர் மாவட்ட செயலாளர் செல்லமுத்து

96777 67276

உள்ளிட்டோர் திமுக தலைமையிலான மதச்சார் பற்ற முற்போக்கு கூட்டணியின் தாராபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் பணிக்குழுவுடன் இணைந்து தேர்தல் பணியில் ஈடுபடுவார்கள் என்று திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா தெரிவித்துள்ளார்.

### சேலம் கிழக்கு மாவட்டம்

# ஆத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் தந்தை பெரியார் பிறந்த நாள்!

## ஒன்றியச் செயலாளர் டாக்டர் வே.செழியன் தலைமையில்!

சேலம், செப். 22 -

பகுத்தறிவு பகலவன் “தந்தை பெரியார்” அவர்களின் 148வது பிறந்தநாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்டம், ஆத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியார் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மலர் தூவி, மாலை அணிவித்து, பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி “சமூக நீதி நாள்” உறுதிமொழி ஒன்றிய கழக செயலாளர் டாக்டர்.வே. செழியன் தலைமையில் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

இந் நிகழ்ச்சியில் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் பத்திரம் மனோகரன், மாவட்ட விவசாய அணி துணைத்தலைவர் ராஜேந்திரன், மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவர் நல்லம்மாள், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் அசோக் குமார், ஒன்றிய கழக நிர்வாகிகள் நடராஜன், செந்தில்குமார், சத்யராஜ், கருணாநிதி, அன்பரசு, வீராசாமி,

செல்வம், சிவக் குமார், சிவாஜி, சின்ன சாமி, பிரபாகரன், மாது, வேலன், ரஞ்சித் குமார், வேல்முருகன், பெரியசாமி,முருகன், கண்ணன், காங்கமுத்து, விஸ்வநாதன், ராஜி, கனகராஜ் ,சுரேஷ், ரங்கநாதன், ஜெயராமன், காளிமுத்து, மருதமுத்து, செல்வராஜ், கிருஷ்ணன், காசிலிங்கம், மாணிக்கம், மோகன், பிரசாந்த், அய்யாக்கண்ணு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.





முத்தமிழறிஞர் கலைஞர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் , கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பிறந்தநாளை முன்னிட்டு கோவையில் கடந்த 19 ஆண்டுகளாக இயங்கி வரும் ‘தளபதி இரத்த தான இயக்கம்’ சார்பில் கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற இரத்த தான முகாமை கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ் செல்வன் துவக்கி வைத்தார். இதில் பொங்கலூர் நா. பழனிச்சாமி, கல்பனா செந்தில், வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, வழக்கறிஞர் வெண்மணி, வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி, கோகுல், கா.சு. நாகராஜ், வே. பாலசுப்பிரமணியம், இரா. மணிகண்டன், ஆடிட்டர் வெ. சசிகுமார், இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### நீர்வளத்துறையில்

# ரூ.42 கோடி டெண்டர் முறைகேடு!

## அமைச்சர் நிர்ப்பந்தம்!

**சென்னை, செப். 22 -**

**ரூ.42 கோடியிலான நீர்வளத்துறை டெண்டரில் முறைகேடு நடந்துள்ளதாகவும், குறைந்த ஒப்பந்தப்புள்ளியை புறக்கணத்து அடுத்த நிறுவனத்துக்கு பணி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் குற்றச் சாட்டு எழுந்துள்ளது. இவை அனைத்தும் அமைச்சரின் நிர்பந்தம் காரணமாக நடந்துள்ளதாக ஒப்பந்ததாரர்கள் எழுப்பியுள்ள குற்றச்சாட்டு நீர்வளத் துறையில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில், மழைநீர் தேங்குவதைத் தடுக்கும் வகையிலும், நீர்நிலைகள் மற்றும் நீர்வழித்தடங்களை சீர மைக்கும் வகையிலும் தமிழக நீர்வளத் துறை சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக ஏரிகள், கால்வாய்கள் மற்றும் நீர்வழிப்பா தைகளில் தூர்வாரும் பணிகள், கால்வாய் அகலப்படுத்துதல், ஆகாயத்தாமரை அகற்றுதல், குப்பைகளை அகற்றுதல் உள்ளிட்ட பணிகளுக்கு டெண்டர் விடப்பட்டுள்ளன.

இந்த டெண்டர் நடவடிக்கைகளில் மொத்தம் 202 பணிகள் இடம்பெற்றுள்ளதாகவும், சில பணிகளுக்கு மிகக் குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும், குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களுக்கு சாதகமாக நிபந்தனைகள் அமைக்கப்பட்டதாகவும் ஒப்பந்ததாரர்கள் குற்றச்சாட்டுகளை எழுப்பி இருந்தனர். மேலும் இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்தன.

இதன் ஒரு பகுதியாக திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அய்யப்பாக்கம் ஏரியின் நீர்த்தேக்கப் பகுதிகளை சீரமைப்பதற்காக நீர்வளத்துறை சார்பில் ரூ.42 கோடியிலான பணிகளுக்கான டெண்டர் அறிவிப்பு வெளியிடப்பட்டு, ஆகஸ்ட் 20ம் தேதி ஆன்லைன் டெண்டர் திறக்கப்பட்டு, ஆகஸ்ட் 28ம் தேதி நிறை வடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பொதுவாக அரசு டெண்டர்களில் தகுதியான ஒப்பந்ததாரர்கள் போட்டியிட்டு, விதிமுறை களுக்கு உட்பட்டு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தகுதியான குறைந்த விலைப்புள்ளி உள்ளிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்படுவது நடைமுறையாகும்.

இந்நிலையில், டெண்டர் போட்டியை தவிர்க்கும் வகையில் சில ஒப்பந்ததாரர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் சென்னை எழும்பூரில் உள்ள தனியார் ஓட்டலில் ஆலோசனை நடத்தியதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அந்த கூட்டத்தில் எந்த ஒப்பந்ததாரர் எந்தப் பணிக்கு விண்ணப்பிப்பது என்பது குறித்து முன்கூட்டியே முடிவு செய்யப்பட்டதாகவும், ஒருவர் விண்ணப்பிக்கும் பணிக்கு மற்றொரு ஒப்பந்ததாரர் போட்டியிடக்கூடாது என முடிவு செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேலும், சில பணிகளுக்கு அரசு மதிப்பீட்டைவிட குறைவான தொகையில், அதாவது ‘மைனஸ்’ விலையில் ஒப்பந்தப்புள்ளிகளை தாக்கல் செய்வது குறித்தும் ஒப்பந்ததாரர்கள் மத்தியில் உடன்பாடு ஏற்பட்டதாக கூறப்படு கிறது. இந்த கூட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு மட்டுமே செயற்பொறியாளர் அலுவலகம் சார்பில் தேவையான சான்றிதழ்கள் வழங்க ப்படுவதாகவும், மற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சான்றிதழ் வழங்குவதில் காலதாமதம் அல்லது மறுப்பு ஏற்பட்டதாகவும் சில ஒப்பந்ததாரர்கள் குற்றம்சாட்டி யுள்ளனர்.

இதற்கிடையே, திருவள்ளூர் மாவட்ட நீர்வளத்துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன் தலைமையிலான அலுவலகத்தின் கீழ் நடைபெறுதாக கூறப்படும் பணிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறு வனத்தை புறக்கணித்து, அதற்கு அடுத்த நிலையில் இருந்த நிறுவனத்திற்கு பணிகள் வழங்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வை க்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அடையாறு முகத்துவாரம் தூர்வாரும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளியில், அஜய் பில்டர்ஸ் நிறுவனம் 6.00 சதவீதம் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கோரியதாகவும், வெங்கடேஷ் பாபு நிறுவனம் 1.90 சதவீதம் குறைவாக கோரியதாகவும் கூறப்படுகிறது. அதேபோல் மற்றொரு பணிக்கும் அஜய் பில்டர்ஸ் நிறுவனம் 6.00 சதவீதம் குறைவாகவும், வெங்கடேஷ் பாபு நிறுவனம் 4.90 சதவீதம் குறைவாகவும் ஒப்பந் தப்புள்ளி கோரியுள்ளது.

இவ்வாறு குறைந்த விலைப் புள்ளி கோரிய நிறுவனங்கள் இருக்கும்போது, அடுத்த நிலையில் இருந்த வெங்கடேஷ் பாபு நிறுவனத்திற்கே அமைச்சரின் அறிவுறுத்தல் படியே இரண்டு பணிகளும் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. எனவே, குறைந்த ஒப்பந்தப்புள்ளியை கோரிய நிறுவனத்தை விட அதிக விலை ப் புள்ளி கோரிய நிறுவனத்திற்கு பணி வழங்கப்பட்டிருந்தால், அதற்கான காரணங்கள் டெண்டர் ஆவணங்களில் தெளிவாக பதிவு செய்யப்படவில்லை.

குறிப்பாக ஒரே நிறுவனத்திற்கு தொடர்ந்து பணிகள் ஒதுக்கப்பட்டிருந்தால், அந்த முடிவுக்கான காரணம் என்ன? குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனம் ஏன் நிராகரிக்க ப்பட்டது? நிராகரிப்புக்கான தொழில்நுட்ப அல்லது தகுதி காரணங்கள் என்ன? டெண்டர் மதிப்பீட்டுக் குழு என்ன முடிவு செய்தது? என்பது குறித்து அதிகாரப்பூர்வ ஆவணங்கள் மூலம் விளக்கம் அளிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே ரூ.42 கோடி மதிப்பிலான நீர்வளத்துறை டெண்டர்கள் தொடர்பாக, குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்கள் மட்டுமே பங்கேற்கும் வகையில் சிறப்பு நிபந்தனைகள் விதிக்கப்பட்ட தாகவும், டெண்டர்களுக்கு குறுகிய கால அவகாசம் வழங்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுகள் வெளியாகின.

எனவே, அய்யப்பாக்கம் ஏரி மற்றும் தொடர்புடைய நீர்வழிப் பணிகளுக்கான டெண்டர் ஆவணங்கள், பங்கேற்ற நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள், தொழில்நுட்ப தகுதி மதிப்பீடு, L1/ L2 நிலை, பணி ஒதுக்கீட்டுக்கான காரணங்கள் உள்ளிட்டவற்றை சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என ஒப்பந்ததாரர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.


‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!









சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தி.மு.கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ். சுகன்யாவை ஆதரித்து தாராபுரம் ஒன்றியம், சின்னக்காம் பாளையம் பேரூராட்சி, கொட்டமுத்தாம் பாளையத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் திருப்பூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் இல.பத்மநாபன், இரா.ஜெயராம கிருஷ்ணன் எம்.எல்.ஏ., ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், பேரூர் கழகச் செயலாளர் பன்னீர்செல்வம் முன்னிலையில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். இதில் முன்னாள் அமைச்சர் மதிவாணன், மாவட்டப் பொருளாளர் கே.எம்.முபாரக், ஒன்றிய கழக செயலாளர்கள் சி.பிரபு சென்னிமலை, மகாகுமார் தலைஞாயிறு, செல்வ. செங்குட்டுவன் திருமருகல் வடக்கு, என்.ஆனந்த் நாகை வடக்கு, என். சதாசிவம் வேதாரண்யம் கிழக்கு உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.